# பள்ளியின் தோற்றமும் வளர்ச்சியும்

உழைக்கும் வர்க்கத்தின் உயர்வுக்காக தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்ட தொழிற்சங்கத் தலைவரும் சுதந்திரப் போராட்ட வீரருமான தியாகி.என்.ஜி.இராமசாமி அவர்களின் நினைவாக கோவை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தால் உருவாக்கப்பட்ட பள்ளி தான் தியாகி என்.ஜி.இராமசாமி நினைவு உயர்நிலைப்பள்ளி.

3-10-1956 ஆம் நாள் திரு.வினோபாபாவே அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

24-5-1959 ஆம் நாள் திரு.ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களால் முதல் கட்டிடம் திறக்கப்பட்டது.

திரு.பக்தவச்சலம் அவர்களால் ஆசிரியர் அறை திறக்கப்பட்டது.

4 வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டிடப் பகுதி செயல்படத் தொடங்கியது.

பள்ளி அலுவலகக் கட்டிடம் பள்ளிச் செயலர் திரு சி.A.சுப்பிரமணியம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இப்பள்ளி சுமார் 5.5 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. இதற்கு தொழிலாளர்கள் ஒரு நாள் ஊதியத்தை நன்கொடையாக அளித்தனர்.

அன்று 90 மாணவ - மாணவியர்களுடன் தொடங்கப்பட்ட இப்பள்ளி இன்று 1900 மாணவ - மாணவியர்களைக் கொண்ட பள்ளியாகத் திகழ்கிறது. இங்கு கல்வி கற்கும் மாணாக்கர்களில் பெரும்பாலோர் தொழிலாளர் குழந்தைகள் ஆவர். ஆசிரியர்களின் சிறப்பான பணியால் பள்ளி இறுதி தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற, சிறந்த பள்ளியாக விளங்கி வருகிறது.

1996 ஜூன் முதல் ஆங்கிலம் பயிற்று மொழியாக்கி கொண்ட வகுப்புகள் தொடங்கப்பட்டன.

2000-2001 ல் 10 புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டுத் திறக்கப்பட்டன.

2001-2002ல் பத்து வகுப்பறைகள் கட்டப்பட்டுத் திறக்கப்பட்டன.

2002-2003ல் கம்பியூட்டர் மையம் திறக்கப்பட்டது.

2002 - 2003 கல்வி ஆண்டில் மேல்நிலைப்பள்ளியாக உயர்வு பெற்றது.

2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆய்வுக கூடங்கள் , 8 வகுப்பறை கொண்ட மூன்று மாடிக்கட்டிடம் கட்டும் பணி தொடங்கப்பட்டு நிறைவு பெற்று உள்ளது.

2005 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வடக்கு மறுபுறத்தில் இருந்த ஓட்டுக்கட்டிடம் நீக்கப்பட்டு, அந்த இடத்தில் சுமார் 60 லட்சம் (அறுபது லட்சம்) செலவில் மூன்று மாடிகள் கொண்ட கட்டிடம் பள்ளி நிர்வாகத்தினரால் கட்டி முடிக்கப்பட்டு பள்ளி மாணவர்களின் உபயோகத்திற்காக ஊரகத் தொழில் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.பொங்கலூர் நா.பழனிசாமி அவர்களால் 02-02-07 அன்று திறக்கப்பட்டது. இதன் மூலம் 14 வகுப்பறைகள், கணினி அறை, நூல் நிலையம், அலுவலக அறை, சினிமா படக்காட்சி அறை ஆகியவற்றிற்கு வசதியான அறைகள் கிடைத்துள்ளது.

**பள்ளியின் குறிக்கோள் :**

இப்பள்ளியின் குறிக்கோள் அறிவு , உழைப்பு , தியாகம் என்பதாகும். அறிவு பெற வேண்டுமென்ற தாகமும் உழைக்கும் திறனும், மனித நேயமும் நற்பண்புகளும் பொது நலனுக்குத் தன்னலத்தைத் தியாகம் செய்யும் உணர்வும , மாணாக்கர்கள் பெற வேண்டும் என்று பெரிதும் கருதுகிறோம்.

**இல்லங்கள் :**

புத்தர், வள்ளுவர், பூங்குன்றனார , வள்ளலார், ஆபிரகாம் லிங்கன் , விவேகானந்தர், பாரதியார் , மகாத்மா காந்தி, இரவீந்திரநாத் தாகூர், வ.உ.சிதம்பரனார், சுபாஷ் சந்திரபோஸ், ஜவஹர்லால் நேரு, பாரதிதாசன், திரு.வி.க. ஆகியோ ரின் பெயர்களில் ஒவ்வொரு பெயரை ஒவ்வொரு வகுப்பிற்கும் இல்லப் பெயராகச் சூட்டி, தேசிய விழா, சர்வதேச விழா, பெரியோர் நாட்கள் ஆகியவற்றை அவ்வில்லங்கள் கொண்டாடும் முறையினை ஏற்படுத்தியுள்ளோம்.

*_*_*